1978 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த ஆமைகளை ஒழிப்பதற்காகத்தான் அரசாங்கம் புதிய சட்டங்களைக் கொண்டுவந்து, தீவிரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் தீண்டாமையை ஒழிக்க ஒரு சுவரொட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிட்டார்கள். தாழ்த்தப்பட்ட சகோதரர் ஒருவரை ''கிட்டே வராதே, எட்டி நில்'' என்று உயர் ஜாதிக்காரர் ஒருவர் சொல்வதைப் போல ஒரு பக்கத்தில் போட்டு, இன்னொரு பக்கத்தில் 'இப்படிச் சொன்னால் இப்படிக் கிடைக்கும்' என்று அவரைச் சிறைக்குள்ளே போட்டிருப்பதைப் போல சுவரொட்டியில் போட்டிருந்தார்கள். அந்த சுவரொட்டியை அன்றைய அரசு தடை செய்துவிட்டது. தீண்டாமை ஒழிப்பில் அதிக அக்கறை காட்டுகின்ற இன்றைய அரசு, பேரறிஞர் அண்ணா வழியில் நடப்பதாகச் சொல்லப்படும் இந்த அரசு அத்தகைய சுவரொட்டிகளையும் வெளியிடுவதோடு, பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்ட அந்த சுவரொட்டியை மீண்டும் வெளியிட இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த ஆண்டு அந்த சுவரொட்டி வெளியிடப்பட்டிருக்கிறது.

சோழன் போக்குவரத்துக் கழகம்.

*வினா. 840 திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தை எம்ப்ளாயர்ஸ் அசோசியேஷனில் அண்மையில் இணைத்ததை அரசு அறியுமா?

(ஆ) தனியார் கைக்கொள்ளும் இந்த முறையை அரசு கைவிட முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இந்த முறையைக் கைவிடத் தேவையில்லை என அரசு கருதுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, எம்ப்ளாயர்ஸ் வைத்திருப்பது எம்பிளாயர்ஸ் அசோசியேஷன். அதிலே போய் நம்முடைய அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இருக்கிற சோழன் ரோட்வேய்ஸ் கார்ப்பரேஷனை இணைத்து, தொழிலாளர்களுக்கு எதிராக வழக்காட வழக்கறிஞர்களை அமர்த்துவதை அரசாங்கம் ஊக்குவிக்கலாமா? அது சரியல்ல என்று கருதி, அந்த எம்பிளாயர்ஸ் அசோசியேஷனில் இருந்து வாபஸ் பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, தென்னிந்திய தொழில் அதிபர்கள் சம்மேளனத்தில் சோழன் போக்குவரத்துக் கழகம் உறுப்பினராகச் சேர்ந்துள்ளது. சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் இன்டியன் கம்பெனிஸ் ஆக்ட்டில் சொல்லப்படுகின்ற இன்டஸ்ட்ரீஸ்-இன் அடிப்படையில் உறுப்பினராகச் சேரக்கூடிய உரிமை உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் தொழிலாளர்களுக்கு எதிராக சம்மேளத்தின் மூலமாக வழக்கறிஞர்கள் யாரும் அமர்த்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. செல்லப்பன் : பேரவைத் தலைவரவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் அப்ரென்டீஸ் ஆக இரண்டாண்டு காலமாகப் பணியாற்றியவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டுவிடுகிறார்கள். அவர்களை வீட்டுக்கு அனுப்பாமல் தொடர்ந்து பணியில் நிரந்தரமாக அமர்த்திக்கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சோழன் போக்குவரத்தில் மட்டுமல்ல. ஏனைய போக்குவரத்துக் கழகங்களிலும் அப்ரென்டீஸ்கள் வேலை செய்கிறார்கள். அவர்களை நிரந்தரமாகப் பணியில் அமர்த்தக்கூடிய திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, தென்னிந்திய தொழிலதிபர்கள் சங்கம் முதலாளிகளால் அமைத்துக்கொள்ளப்பட்ட சங்கம், அவர்கள் மெஜாரிட்டியாக இருக்கக்கூடிய அந்த சங்கத்தில் பொதுதுறை நிறுவனமான சோழன் போக்குவரத்துக் கழகம் போய்ச் சேர்ந்துகொள்கிறது என்றால் சில பிரச்சினைகள் வரும்போது அவர்கள் எடுக்கின்ற முடிவுக்கு இவர்களும் கட்டுப்பட்டாக வேண்டும். பெரும்பாலும் தொழிலாளர்களுக்கும் விரோதமான கொள்கையை எடுத்தால்கூட யாரும் போய் கேட்க முடியாது. மேனேஜிங் டைரக்டர் என்பவர் அதிகாரிதான். அவர் முதலாளி அல்ல. ஆகவே இந்தப் பொது நிறுவனம் போய் அந்தச் சங்கத்தில் உறுப்பினராகச் சேருவது என்பது மாறலி ராங், இட் இஸ் இன்கரக்ட். ஆகவே உடனடியாக இதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, தனியார் பலர் இருக்கின்ற இந்தத் தென்னிந்தியத் தொழிலதிபர்கள் சம்மேளனத்தில் பொதுத் துறையைச் சேர்ந்த சோழன் போக்குவரத்துக் கழகம் உறுப்பினராக இருக்குமானால் பல குறைபாடுகளைக் களைவதற்குக்கூட இது உதவியாக இருக்கும். ஆகவே இது தொடர்ந்து இருக்கலாம் என்று கருதுகிறேன்.

1978 ஏப்ரல் 7]

திரு. ரா. கிருஷ்ணன் ; தலைவரவர்களே, இந்தக் கழகத்தில் 98 பேர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அத்தகைய சூழ்நிலை இங்கே ஏற்பட்டிருக்கிறது. இப்போது அது இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் கேஸ் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சோழன் போக்குவரத்தில் ஏற்கனவே லா ஆபீஸர்ஸ் இருக்கிறார்கள். அவர்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் அளிக்கப்படுகிறது, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னும் மேற்கொண்டு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து இந்த கேசை நடத்துவதற்கு, பொதுவாக வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை அடியோடு ஒழித்து விடவேண்டும் என்று சட்ட நிபுணர்களை இந்த வழக்குகளில் சேர்ப்பது சரியாக இருக்குமா? ஆகவே, உடனடியாக இதனை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த 98 நபர்கள் பிரச்சினை சோழன் போக்குவரத்தைச் சேர்ந்ததல்ல. அது பல்லவன் போக்குவரத்தைச் சேர்ந்ததாகும். இந்தக் குறிப்பிட்ட வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞர் யாரும் இந்தச் சம்மேளனத்தின் மூலம் அமர்த்தப்படவில்லை என்பதை மீண்டும் கூறிக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, தென்னிந்தியத் தொழிலதிபர்கள் சங்கம் என்று அதற்குப் பெயர். அதில் சோழன் போக்குவரத்துக் கழகம் உறுப்பினராக இருப்பது எப்படிச் சாத்தியமாகும். சோழன் போக்குவரத்துக் கழகத்துக்கு அதிபர் யார்? அதிபரே இல்லாத அரசுத் துறையைச் சேர்ந்த அந்தப் போக்குவரத்துக் கழகத்தைக் கொண்டுபோய் தென்னிந்திய அதிபர்கள் சங்கத்தில் இணைப்பது என்பது சரியானதல்ல, அது முறையானதும் அல்ல.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : ஆகவே இதனைக் கொண்டுபோய் அந்தச் சங்கத்தில் சேர்ப்பது சரியல்ல. ஆகவே இதனை மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி தென்னிந்தியத் தொழிலதிபர்கள் சம்மேளனத்தைப் பொறுத்தவரைக்கும் இன்டியன் கம்பெனிஸ் ஆக்ட்படி தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் உறுப்பினராக இருக்கலாம். அதன் அடிப்படையில் சோழன் போக்குவரத்தும் இன்டியன் கம்பெனிஸ் ஆக்ட்-இன் கீழ் வருகின்ற ஒரு நிறுவனம் என்ற முறையிலே அந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தச் சங்கத்தில் அது உறுப்பினராக இருப்பதால் தொழிலாளர்களுக்கு எந்த வகையிலும் குந்தகம் ஏற்படாத வண்ணம் கண்டிப்பாகப் பார்த்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடானா நதியின் குறுக்கே பாலம்.

*வினா 841— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள பிரதேசத்திலிருந்து அடச்சாணிக்கு செல்லும் பாதையில் உள்ள கடானா நதியின் மீது பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கோட்டப்பட்டி—தும்பல் சாலை

* வினா 842— திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், கோட்டப்பட்டியில் இருந்து தும்பல் செல்லும் வனத்துறை நெடுஞ்சாலையை பஸ் போக்குவரத்துக்கு ஏற்றவாறு செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

[முற்பகல் 9-50]

திரு. எம். அண்ணாமலை : கோட்டப்பட்டியிலிருந்து தும்பல் செல்லும் வனத்துறை நெடுஞ்சாலை சரியான முறையில் இல்லாத காரணத்தால்—நாற்பதுக்கு மேற்பட்ட கிராமங்கள், மலைப்பகுதிகள் உள்ளன—ரோடு வசதி சரியாக இல்லாததால் சிறிதளவு கூட முன்னேற்றம் இல்லை. ஆகவே அந்த நெடுஞ்சாலையை ஹைவேசில் எடுத்து பஸ் போக்குவரத்து வசதி செய்து தர அரசு முன்வருமா?